# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| **06.12.2017** | | **2017ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6–ம் தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.**<br>**தனி அலுவலர், துவாக்குடி நகராட்சி.** | |
| 06.12.2017 | 127 | **பொருள் எண். 1**<br>துவாக்குடி நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை அபிவிருத்தி திட்டம் – 2017-2018–ம் ஆண்டு நிதியின் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள ரூ. 100 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்ட பிரேரனை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–5 அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் மேற்படி பணிக்கு 100.00 இலட்சத்துக்கு தமிழ்நாடு நகர்புற சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (Turip – 0.60 + CGF – 0.12 + CFC- 0.18+ ULB – 0.10) நிர்வாக அனுமதி அளித்து செயல் முறை உத்தரவு கடிதம் (செயல் முறை ந.க.எண் 21422/2017/இ3 நாள் 03.10.2017) வரப்பெற்றதை தொடர்ந்து கீழ் கண்டவாறு சாலை பணிகள் மேற்கொள்ள குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி 29.11..2017 ம் தேதி வரப்பட்டதற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

**பணிகள் விபரம்**

**தமிழ்நாடு நகர்புற சாலை அபிவிருத்தி திட்டம் – 2017-2018**

| சிப்பம் – I | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்சம்)** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 5–வது வார்டு ராவுத்தாண்மேடு பிள்ளையார் கோவில் முதல் திருவள்ளுவர் நகர் பாலம் வரை மற்றும் திருவள்ளுவர் நகர் மெயின்சாலை, பெல்நகர் திரு.வி.க தெரு மற்றும் 26–வது குறுக்குத்தெரு மற்றும் 8–வது வார்டு வ.உ.சி நகர் சாலை எண்.2, 3, 4 மற்றும் | 100.00 | M/s, KSP Construction, Namakkal 4.88% மதிப்பீட்டிற்கு அதிகம்<br>Thiru, C. Senthilkumar, Pudukottai 9.08% மதிப்பீட்டிற்கு அதிகம் | 4.88 % மதிப்பீட்டை விட அதிகம் கொடுத்துள்ள M/s, KSP Construction, Namakkal |

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S. KSP Construction, Namakkal என்ற நிறுவனம் மற்றும் Thiru, C. Senthilkumar, Pudukottai ஒப்பந்ததாரரும் கலந்து கொண்டனர். மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு கவர் முறையில் பெறப்பட்டுள்ளது. இருவரும் தகுதி பெற்றுள்ளனர். மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை (Price Bid) 30.11.2017 ம் தேதி அன்று மேற்படி ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு 4.88% அதிகம் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட M/S. KSP Construction, Namakkal நிறுவனம் அளித்துள்ள கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை விட Thiru, C. Senthilkumar, Pudukottai ஒப்பந்ததாரர் அதைவிட அதிகம் அளித்துள்ளதால் மேற்படி M/S. KSP Construction, Namakkal ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மேற்கண்ட பணிக்கு 4.88% அதிகம் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட M/S. KSP Construction, Namakkal நிறுவனம் அளித்துள்ள கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை விடThiru, C. Senthilkumar, Pudukottai ஒப்பந்ததாரர் அதைவிட அதிகம் அளித்துள்ளதால் மேற்படி M/S. KSP Construction, Namakkal ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து 30.11.2017ஆம் தேதியில் இவ்வலுவலக கடித வாயிலாக விலை குறைப்பு செய்து தர இயலுமா என தெரிவிக்கப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் ஏற்கனவே அளிக்கப்பட்ட விலை சதவிகிதத்தை விட குறைத்து 4.75% பணி மேற்கொள்ள 04.12..2017ம் தேதி ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார். மேற்படி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் M/S. KSP Construction, Namakkal என்ற நிறுவனத்தினை ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை

| | | | |
|---|---|---|---|
| | | குறைந்து கொடுக்க கோரி 30.11.2017ந் தேதியில் கடிதம் அனுப்பப்பட்டது (Negotiation letter). மேற்கண்ட ஒப்பந்ததாரர் கட்டுமானப்பொருட்களின் விலை உயர்வு மற்றும் வேலையாட்களின் கூலி உயர்வு காரணமாக 4.75% –க்கு தான் பணி மேற்கொள்ள இயலும் என ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்து கொடுத்துள்ளார்.<br>3. மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதாலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி கடிதத்தில் தெரிவித்துள்ள கால கெடுவிற்குள் செய்து முடித்து பணி முடிவறிக்கை மற்றும் நிதி பயனீட்டுச்சான்றுகள் தயார் செய்து அரசுக்கு அனுப்புவதற்கு ஏதுவாக குறைந்த ஒப்புந்தப்புள்ளி M/S. KSP Construction, Namakkal என்ற நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 4.75% ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>எனவே மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதால் ஏற்படும் பொருள் இழப்பு மற்றும் காலதாமதம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும் திட்டப்பணிகளை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டி உள்ளதாலும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் கூடுதல் செலவின தொகையை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 990/2017/இ1** | |
| 06.12.2017 | 128 | <u>**பொருள் எண். 2**</u><br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள 17 பொது கழிப்பிடங்களில் உள்ள நச்சு தொட்டிகளில் கழிவு நீர் நிரம்பி வழியும் நிலையில் உள்ள நச்சுத் தொட்டிகளை சுத்தம் செய்வதற்கு தேவையான உபகரணங்கள் கொண்ட வாகனம் இந்நகராட்சியில் இல்லை என்ற காரணத்தினால் தனியார் மூலம் நச்சுத்தொட்டிகளை சுத்தம் செய்ய விலைப்புள்ளி கோரவும், குறைந்த விலைப்புள்ளியை கருத்தில் கொண்டு பணி செய்யும், செலவினத்தொகை ரூ. 1,00,000/– மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1272/2017/எச்1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

______________ X ______________